# பணம், பெண், புகழ்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும் போது மூன்று முக்கியமான காரியங்களான பணம், பெண், புகழ் என்பவை அவனைத் திரும்பவும் அவனுடைய பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றன என்பதை நான் கவனித்திருக் கிறேன். வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமான பணத்தைக் கொடுக்க முன் வந்த போது, அந்த பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப் போட்டான் என்று பார்க்கிறோம்** (இச்சம்பவம் உங்களுக்குத் தெரிந்த ஒன்றாகும்)

10. **சிம்சோன், தெலிலாளிடம் தன்னை விற்றுப் போட்டான்.** இந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்தரின் இரகசியத்தை வெளியிடும் வரை அவனை மயக்கினாள்.

11. **சவுல் புகழுக்காக தேவ வரத்தை விற்றுப் போட்டான்.** அவன் ஒரு தீர்க்கதரிசியா

யிருந்தான். (தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அவன் எண்ணப்பட்டான் என்று வேதம் கூறுகிறது). **இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்து போனான்.**

12. **மனிதன் விழுந்து போகத் தக்கதான இந்த மூன்று முக்கியமான காரியங்களை நான் வேதத்திலிருந்து கண்டு, எல்லா நேரங்களிலும் இந்த மூன்று காரியங்களை நான் தவிர்க்கத்தக்கதாக நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தேன்.**

13. **கூட்டங்களில் ஒருபோதும் பணத்திற் காக பிச்சையெடுக்க மாட்டேன் என்று தேவனிடம் நான் வாக்களித்தேன்.** அது மட்டுமல்ல, **காணிக்கை தட்டை ஜனங்கள் மத்தியில் அனுப்பி (இத்தகைய காணிக் கையின் மூலம் பல ஆயிர டாலர்கள் கிடைக்கும் என்று நான் அறிந்திருந்தேன்) கூட்டங்களுக்குத் தேவையான பண உதவியை நான் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் என்னைக் கைவிடுவா ரென்றால், நான் ஊழியத்தை விட்டு விட்டு**

**என் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் என்றும் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கை செய் திருந்தேன்.**

14. இந்தக் காரியத்தில், யாரையும் எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் என் பணத் தேவையை அவர் அற்புத விதமாக சந்தித்தார். ஜனங்கள் பணம் தரத் தக்கதாக சற்று அவர்களை நிர்பந்திக்க நான் அனுமதிக்காததினால் கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யும் மூன்று அல்லது நான்கு நிர்வாகிகள் தங்கள் வேலையையும் இழந்து விட்டனர். **இத்தகைய காரியத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது.**

*செய்தி:* **உள்திரை,** ஜனவரி 21, 1956, ஜெபர்சன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

















